


தினப்புயல்
PTN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




# முடங்கியது வடக்கும் கிழக்கும் - பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பு



இன்றைய தினம் வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் முழுமையான நிர்வாக முடக்கல் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு ஏற்கனவே தமிழ் கட்சிகள் அழைப்பு விடுத்திருந்த நிலையில், அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு, ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுவதைக் காணமுடிகிறது. இன்று அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு, வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைவடைந்துள்ளதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

வடக்கில், கிழக்கில் தமிழர் நிலங்களில் ஆக்கிரமிப்பு, பௌத்தமயமாக்கல் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை நிறைவேற்ற முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்கு எதிராகவும் இந்த நிர்வாக முடக்கல் போராட்டம் இன்று முன்னெடுக்கப்படுகின்றது. இலங்கை தமிழரசு கட்சி, புளொட், ரெலோ, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஜனநாயக போராளிகள் கட்சி என இணைந்து இன்று இந்த ஹர்த்தால் நடவடிக்கைக்கு அழைப்புவிடுத்திருந்தன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முழுமையான நிர்வாக முடக்கல் போராட்டம் மக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இவ் நடவடிக்கைக்கு வர்த்தக சங்கத்தினர், முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத்தினர், தனியார் பேரூந்து உரிமையாளர் சங்கத்தினர் தமது முழுமையான ஆதரவினை வழங்கியிருக்கின்றனர்.

அதேபோல அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சிகை அலங்கரிப்பாளர்கள் சங்கம், அச்சு பதிப்பக சங்கத்தினர் என அனைத்துத் தரப்பினரும் ஹர்த்தாலுக்கு தமது ஆதரவினை வழங்கியிருக்கின்றனர். அதேவேளை, மலையக அரசியல் கட்சித் தலைவர்களும், முஸ்லீம் கட்சித் தலைவர்களும், முஸ்லீம் மக்களும் இவ் ஹர்த்தால் நடவடிக்கைக்கு தமது ஆதரவினை வழங்கியிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. இன்றைய தினம் பாராளுமன்றத்தில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும் என ஏற்கனவே நீதி அமைச்சர் தெரிவித்திருந்த போதிலும், இன்றைய பாராளுமன்ற ஒழுங்குபத்திரத்தில் இவ்விடயம் இல்லை எனத் தெரியவந்துள்ளது.

# ஜனாதிபதி நிதியத்திற்கு 02 மில்லியன் ரூபா நன்கொடை



கிங்குசல ஆய்வுச் சங்கத்தின் ஸ்தாபக தலைவரும் ஓய்வுபெற்ற வலயக் கல்வி பணிப்பாளருமான சரத் சேனநாயக்கவினால் தனது ஆவணப்படுத்தல் மற்றும் விரிவுரைகள் ஊடாக கிடைக்கப்பெற்ற வருமானத்தில் இருந்து ஜனாதிபதி நிதியத்திற்கு வழங்குவதற்காக 2 மில்லியன் ரூபாவை நேற்று (24) ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த தொகையை வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற யுத்தத்தில் அங்கவீனமடைந்தவர்களுக்கு செயற்கை கால்களை வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்ய உள்ளதாக ஜனாதிபதி செயலாளர் தெரிவித்தார். ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர், ஜனாதிபதி அலுவலகத்தின் மேலதிகச் செயலாளர் சரத் குமார, கிங்குசல ஆய்வுச் சங்கத்தின் செயலாளர் ஏ.பி.விக்ரமசிங்க, கிங்குசல சங்கத்தின் முன்னாள் இளைஞர் அலுவல்கள் செயலாளர் சட்டத்தரணி ஜயதிலக்க முதுகம உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

# தடைப்பட்ட மின்சாரம் மீண்டும் வழமைக்கு – காரணம் வெளியானது

மின்சாரம் துண்டிக்கப்பட்ட பல பகுதிகளுக்கு மீண்டும் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். கொழும்பு 4, 5 மற்றும் 7 ஆகிய பகுதிகளில் மின்சார விநியோகம் வழமைக்கு திரும்பியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நேற்று பிற்பகல் கொலன்னாவ துணை மின் நிலையத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக கொழும்பில் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேசியாவில் நிலநடுக்கம் - இலங்கைக்கு சுனாமி எச்சரிக்கை இல்லை



இந்தோனேசியாவில் இரண்டு முறை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்நாட்டின் கெபுலாவான் பதுவில் இன்று அதிகாலை நில நடுக்கம் உண்டானது. இது ரிக்டர் அளவில் 7.3 புள்ளிகளாக பதிவானது. நிலநடுக்கத்தால் வீடு, கட்டிடங்கள் பயங்கரமாக குலுங்கின.

இதனால் தூங்கிக்கொண்டிருந்த மக்கள் அலறியடித்தபடி வீடுகளில் இருந்து வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்தனர். அதன் பின் சில மணி நேரங்களுக்கு பிறகு மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 5.8 ஆக பதிவானது. இதனால் மக்கள் பெரும் பீதி அடைந்தனர்.

முதல் நிலநடுக்கம் 43 கி.மீ. ஆழத்திலும் 2 வது நிலநடுக்கம் 40.கி.மீ. ஆழத்திலும் மையம் கொண்டிருந்ததாக ஐரோப்பிய மத்திய தரைக்கடல் நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கங்களால் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து உடனடியாக தகவல் வெளியாகவில்லை. இந்தோனேசியாவில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், இலங்கைக்கு சுனாமி எச்சரிக்கை இல்லை என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# பெற்றோர்களுக்கு கல்வி அமைச்சின் அறிவிப்பு




பாடசாலைகளில் தரம் 2 முதல் தரம் 11 வரையான வகுப்புகளுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ள விரும்பும் விண்ணப்பதாரர்கள் உரிய விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6 ஆம் வகுப்புக்கு இது பொருந்தாது என்றும் கூறப்பட்டுள்ளது. கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம், கிடைக்கக்கூடிய வெற்றிடங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு பாடசாலைகள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தேசிய பாடசாலைகளின் இடைநிலை தரங்களுக்கு மாணவர்களை உள்வாங்குவதற்கான கடிதங்களை கல்வி அமைச்சு இனி வழங்காது என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முன்னாள் சட்டமா அதிபர் தொடர்பில் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு



முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவை கைது செய்வதையும், சட்டமா அதிபராக அவரது செயற்பாடுகள் தொடர்பில் வாக்குமூலங்களை பதிவு செய்வதையும் தடுத்து, பயங்கரவாத தடுப்பு பணியகம் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

முன்னாள் சட்டமா அதிபர் தாக்கல் செய்த ரிட் மனுவை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற குழு இந்த இடைக்கால உத்தரவை பிறப்பித்துள்ளது.

முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா முன்வைத்த விடயங்களை பரிசீலித்த நீதிமன்றம் இந்த இடைக்கால உத்தரவை பிறப்பித்துள்ளது.

## வரி வருமானம் அதிகரித்திருப்பதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவிப்பு




உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் அதாவது ஜனவரி, பெப்ரவரிமற்றும்மார்ச் ஆகியமூன்று மாதங்களில் 316,619 மில்லியன் ரூபாவைச் சேகரித்துள்ளது.

கடந்த ஆண்டின் இதே காலாண்டில், வருவாய்த் திணைக்களம் 146,565 மில்லியன் ரூபாவை வசூலித்திருந்தது.

இதன்படி, கடந்த வருடத்தின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் இது 216 வீத அதிகரிப்பாகும்.

அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கை மற்றும் நாட்டின் பொருளாதார செயற்பாடுகள் படிப்படியாக மீட்சியடைந்தமை மற்றும் வரி நிர்வாகத்தின் வினைத்திறன் அதிகரிப்பு என்பன வரி வருமானத்தை அதிகரிக்க வழிவகுத்துள்ளதாக திணைக்களம் தனது அறிவிப்பில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

## பட்டினி மற்றும் வறுமையின் அபாயத்தை எதிர்நோக்கும் வயதானவர்கள்



அதிகரித்து வரும் உலகளாவிய செலவுகள் காரணமாக வயதானவர்கள் பட்டினி மற்றும் தீவிர வறுமையின் அபாயத்தை எதிர்நோக்குவதாக புதிய உலகளாவிய அறிக்கை ஒன்று குறிப்பிட்டுள்ளது. ஹெல்ப் ஏஜ் இன்டர்நெசனல் நிறுவனத்தின் அறிக்கை இதனை தெரிவித்துள்ளது.

உலகளாவிய உணவு, எரிபொருள் மற்றும் நிதி நெருக்கடி உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான முதியவர்கள் மீது பேரழிவுகரமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. உலகளாவிய உணவு, எரிபொருள் மற்றும் நிதி நெருக்கடியின் தாக்கம் வயதானவர்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை, அர்ஜென்டினா, கொலம்பியா, எத்தியோப்பியா, லெபனான், மலாவி, மொசாம்பிக், பிலிப்பைன்ஸ், தான்சானியா மற்றும் யேமன் ஆகிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் அடிப்படையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

உணவு மற்றும் எரிபொருள் செலவுகள், அதிகரித்து வரும் நிதி நிலைமைகள் உலகளவில் மில்லியன் கணக்கான மக்களை பாதிக்கின்றன. ஆனால் ஏற்கனவே குறைந்த அல்லது வருமானம் இல்லாத வயதானவர்களுக்கு, நிலைமை இருண்டதாக உள்ளதாக ஹெல்ப் ஏஜ் கூறுகிறது. வயதானவர்கள்மற்றும் அவர்களது குடும்பத்தினர் சமைக்கக்கூடிய உணவின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதாக அறிக்கை காட்டுகிறது. இந்த விடயத்தில் வயதான ஆண்களை விட வயதான பெண்கள் மோசமாக பாதிக்கப்படுகின்றனர்.

இதேவேளை இலங்கை, கொலம்பியா, எத்தியோப்பியா, லெபனான், மொசாம்பிக், தான்சானியா மற்றும் யேமன் ஆகிய நாடுகளில், நெருக்கடியின் போது முதியவர்களின் மேலாண்மை திறன் எவ்வாறு பலவீனப்படுகின்றது என்பதையும் ஹெல்ப் ஏஜ் அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

## நுவரெலியாவில் 04 மாடிகளுக்கு மேல் புதிய கட்டிடங்கள் அமைக்கத் தடை



நுவரெலியா மாவட்டத்தில் 4 மாடிகளுக்கு மேல் புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பது மே 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுங்குமுறைகளை அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சர்கள் சபையில் அங்கீகாரம் வழங்கி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முறைசாரா அபிவிருத்தி காரணமாக நுவரெலியா நகரின் அழகு படிப்படியாக குறைந்து வருவதாகவும், இது சுற்றுலாத்துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் ஜனாதிபதி அண்மையில் தெரிவித்தார்.

எனவே, இப்பகுதியில் சுற்றுலா வளர்ச்சிக்கு தேவையான சூழலை உருவாக்கும் வகையில், விரிவான சுற்றுலா மேம்பாட்டு மாஸ்டர் பிளான் தயாரிக்க வேண்டிய அவசியம் இருப்பதால், இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## சூடானில் குழந்தைகள் உட்பட 413 பேர் கொலை



சூடானில் உள்நாட்டு போர் உச்சகட்டத்தை எட்டி உள்ளது. அங்குள்ள ராணுவத்தினருக்கும், துணை ராணுவ படைக்கும் இடையே கடந்த சில நாட்களாக தொடர்ந்து சண்டை நடந்து வருகிறது.

ரமழான் பண்டிகையையொட்டி போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டாலும் அங்கு சண்டை ஓய்ந்தபாடில்லை. தலைநகர் கார்ட்டூம் உள்ளிட்ட பகுதிகளில் எங்கு பார்த்தாலும் துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டு வருவதாகவும், குண்டு மழை பொழிந்து வருவதாகவும் பொது மக்கள் தெரிவித்து உள்ளனர். இதனால் அவர்கள் அச்சத்தில் இருந்து வருகின்றனர்.

தொடர் சண்டை நடந்து வருவதால் பொதுமக்கள் சூடானை விட்டு வெளியேறி வருகின்றனர். இந்த போரால் பொது மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். உயிர் பலியும் அதிகரித்து வருகிறது. இந்த சண்டைக்கு இதுவரை 413 பேர் இறந்துவிட்டதாகவும், 3,551 பேர் படுகாயம் அடைந்ததாகவும் உலக சுகாதார மைய செய்தி தொடர்பாளர் மார்க்ரெட் ஹாரீஸ் தெரிவித்து உள்ளார்.

மேலும் இதில் ஏதும் அறியாத அப்பாவி குழந்தைகள் 9 பேர் பலியாகி விட்டனர். 50 குழந்தைகள் காயம் அடைந்து உள்ளனர். மருத்துவமனைகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டு வருவதால் காயம் அடைந்தவர்கள் மருத்துவ உதவி கிடைக்காமல் தவித்து வருகிறார்கள். தொடர் போரால் சாவு எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக அஞ்சப் படுகிறது. சூடானில் நடந்து வரும் உள்நாட்டு போரால் பொது மக்கள் உணவு, குடிநீர், மின்சாரம், மருத்துவ வசதி உள்ளிட்ட எந்தவித அடிப்படை வசதியும் இல்லாமல் தவித்து வருகின்றனர்.

சூடானில் தமிழர்கள் உட்பட 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்தியர்கள் வசித்து வருகின்றனர். அவர்கள் எங்கு செல்வது என தெரியாமல் தவித்து வருகின்றனர். சூடானில் சிக்கி தவிக்கும் இந்தியர்களை மீட்க வெளியுறவு துறை அமைச்சகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. சவூதி அரேபியாவில் உள்ள செட்டாநகர் விமான நிலையத்தில் இந்திய விமான படையை சேர்ந்த 2 விமானங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளது.

இந்திய கப்பல் படையை சேர்ந்த ஐ.என்.எஸ்.சுமேகா என்ற போர் கப்பல் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது. சூடான் தனது வான் வெளியை மூடி உள்ளதால் உலக நாடுகள் தங்கள் நாட்டினரை மீட்பதில் சிக்கல் நீடிக்கிறது. விமானங்கள் சூடானுக்கு செல்ல முடியாத நிலை உள்ளதால் அவர்களை மீட்க என்ன நடவடிக்கை எடுக்கலாம் என இந்தியா உள்ளிட்ட நாடுகள் ஆலோசித்து வருகிறது.

## 16 வருடங்களுக்குப் பிறகு சென்னையில் ஹொக்கி போட்டிகள்



சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் வரும் ஆகஸ்டு 3 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை 7வது ஆசிய சாம்பியன்ஸ் கோப்பைக்கான ஹொக்கி போட்டி நடக்கிறது.

16 ஆண்டுகளுக்கு பிறகு சென்னையில் சர்வதேச ஹொக்கி போட்டி அரங்கேறுகிறது. இந்த போட்டிக்காக மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியம் புதுப்பிக்கப்படுகிறது.

சாம்பியன்ஸ் கோப்பை ஹொக்கி போட்டியில் நடப்பு சாம்பியன் தென்கொரியா, முன்னாள் சாம்பியன்கள் இந்தியா, பாகிஸ்தான், சீனா, ஜப்பான், மலேசியா ஆகிய 6 அணிகள் கலந்து கொள்ளும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.

இதில் இந்தியாவுடனான உறவு சீராக இல்லாததால் பாகிஸ்தான், சீனா அணிகள் இந்த போட்டியில் பங்கேற்குமா? என்பதில் சந்தேகம் நிலவியது. ஆனால் பாகிஸ்தான், சீனா அணிகள் ஆசிய ஹொக்கி போட்டியில் பங்கேற்பதை உறுதி செய்து இருப்பதாக ஆக்கி இந்தியா அமைப்பு நேற்று தெரிவித்தது.

## இன்றைய வானிலை தொடர்பான அறிவிப்பு

வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா, சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் பல இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல் மாகாணத்திலும் காலி, மாத்தறை, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் காலை வேளையிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.